செய்தி வெளியீடு எண்: 300 நாள் : 17.06.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. P. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் இன்று (17.6.2016) சென்னை வேப்பேரியிலுள்ள, சென்னை கால்நடை மருத்துவ கல்லூரியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அவ்வமையம் அவர்கள் கால்நடை இலவச அவசர ஊர்தி மாதிரியை ஆய்வு செய்து அது குறித்து சில ஆலோசனைகளை வழங்கினார்கள்.

மேலும், பல்வேறு கால்நடை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளான, புறநோய் பிரிவு, நாய் மற்றும் மாடுகள் புலனாய்வுப் பிரிவு, இதய நோய்ப் பிரிவு, தோல் சிகிச்சைப் பிரிவு, சிறிய செல்லப் பிராணிகள் மற்றும் பெரிய பிராணிகள் சிகிச்சைப் பிரிவு, ஈனியல் பிரிவு, மூட்டு நோய் அறுவைச் சிகிச்சைக் கூடம் போன்றவற்றை பார்வையிட்டார்கள். மேலும் கால்நடை உரிமையாளர்களிடம் இம்மருத்துவமனையில் அவர்களது கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ முறைகள் குறித்து கலந்துரையாடினார்கள்.

பின்னர் கால்நடை உடலியல் துறையின் ஆய்வக வசதிகள் குறித்து கேட்டறிந்தார்கள். மேலும் அங்குள்ள மாணவர்களிடமும் இங்கு வழங்கப்படும் கல்வி குறித்தும் கலந்துரையாடினார்கள். இந்தியாவிலேயே முதன் முதலில் கொண்டுவரப்பட்ட ஊடுருவி கதிர் மூலம் நோய் கண்டறியும் பல்வேறு நவீன கருவிகளைப் பார்வையிட்டு அவைகளின் பயன் குறித்து அறிந்தார்கள்.

அமெரிக்க மாகாணத்தில் உள்ள ஜார்ஜியா பல்கலைக்கழகத்திலிருந்து இக்கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடி இங்கு வழங்கப்படும் பயிற்சியின் பயன் பற்றி கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்வின் போது கல்லூரி முதல்வர் டாக்டர் சி. பாலசந்திரன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரி பதிவாளர் டாக்டர் டி.ஜே. அரிகிருஷ்ணன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, முனைவர் ரா.ஜெயபிரகாஷ் அவர்கள், சிகிச்சையியல் இயக்குநர் மற்றும் சிகிச்சைத் துறை பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**